செய்தி வெளியீடு எண்: 221 நாள்: 12.04.2013

## கூட்டுறவுச் சங்கங்களுக்கான மூன்றாம் கட்டத் தேர்தல்

## 356 சங்கங்களில் 6908 பேர் போட்டி

## 4673 சங்கங்களில் 39627 பேர் போட்டியின்றி தேர்வு

## மாநிலத் தேர்தல் ஆணையர் அறிவிப்பு

தமிழகத்தில் நடைபெற்று வரும் கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களில் மூன்றாம் கட்டத் தேர்தலில் 356 சங்கங்களில் 6908 பேர் போட்டியிடுகின்றனர் என்றும் 4673 சங்கங்களில் 39627 நிர்வாகக் குழு உறுப்பினர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்றும், கூட்டுறவுச் சங்கங்களுக்கான மாநிலத் தேர்தல் ஆணையர் திரு.ம.ரா.மோகன், இ.ஆ.ப.,(ஓய்வு) தெரிவித்துள்ளார். இது சம்மந்தமாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு;--

## மூன்றாம் கட்டத் தேர்தல்

தமிழகத்தில் மூன்றாம் கட்டத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் 09.04.2013 அன்று பெறப்பட்டன. மொத்தம் தேர்தல் நடைபெறும் 5446 சங்கங்களில் 5029 சங்கங்களில் 65789 வேட்பு மனுக்கள் பெறப்பட்டன. 417 சங்கங்களில் வேட்பு மனுக்கள் ஏதும் பெறப்படவில்லை. பெறப்பட்ட 65789 வேட்பு மனுக்களில் பரிசீலனையின்போது 7506 வேட்பு மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. 58283 வேட்பு மனுக்கள் தகுதிவாய்ந்த வேட்பு மனுக்களாக அறிவிக்கப்பட்டன. 10.04.2013 அன்று 4513 வேட்பு மனுக்கள் திரும்பப் பெறப்பட்டன. இறுதியாக 53770 வேட்பு மனுக்கள் இருந்தன.

## போட்டியின்றி தேர்வு

மூன்றாம் கட்டத் தேர்தலில் 4673 சங்கங்களில் 39627 நிர்வாகக்குழு உறுப்பினர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் 5774 போர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனத்தவருக்கான ஒதுக்கீட்டின் கீழும், 10915 பேர் பெண்களுக்கான இட ஒதுக்கீட்டின் கீழும், 22938 பேர் பொதுப்பிரிவின் கீழும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

## வாக்குப்பதிவு நாள்

மூன்றாம் கட்டத் தேர்தல் வாக்குப்பதிவு 19.04.2013 அன்று நடைபெறவுள்ளது. வாக்குப்பதிவு காலை 8.00 மணிக்குத் தொடங்கி மாலை 5.00 மணி வரை நடைபெறும். மூன்றாம் கட்டத்தில் 356 சங்கங்களில் 3048 நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர். இவர்களுள் 429 பேர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இட ஒதுக்கீட்டின் கீழும், 706 பேர் பெண்களுக்கான இட ஒதுக்கீட்டின் கீழும், 1913 பேர் பொதுப்பிரிவின் கீழும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். 3048 நிர்வாகக் குழு உறுப்பினர்களை தேர்ந்தெடுக்க 6908 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். அது பற்றிய விபரம் வருமாறு :

**<u>கூட்டுறவுச் சங்கங்களுக்கான முதல்நிலை – மூன்றாம் கட்டத் தேர்தல்</u>**

**<u>வேட்பு மனுத் தாக்கல் விபரம்</u>**

| செயற்பதிவாளர் பெயர் | **மூன்றாம் கட்டத்** தேர்தல் நடைபெற வேண்டிய சங்கங்கள் | வேட்பு மனுக்கள் பெறப்படாத சங்கங்கள் | வேட்பு மனு பெறப்பட்ட சங்கங்கள் | நிர்வாகக்குழு உறுப்பினர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப் பட்ட சங்கங்கள் | நிர்வாகக் குழு உறுப்பினர்களை தேர்ந்தெடுக்க 19.04.2013 அன்று தேர்தல் நடைபெற உள்ள சங்கங்கள் |
|---|---|---|---|---|---|
| கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | 1769 | 9 | 1760 | 1515 | 245 |
| தொழில் வணிகத்துறை ஆணையர் | 66 | 6 | 60 | 57 | 3 |
| மீன் வளத்துறை ஆணையர் | 391 | 5 | 386 | 331 | 55 |
| கதர் கிராமத் தொழில் வாரிய முதன்மை செயல் அலுவலர் | 26 | 2 | 24 | 22 | 2 |
| கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் | 337 | 1 | 336 | 328 | 8 |
| பால்வளத்துறை ஆணையர் | 2435 | 388 | 2047 | 2010 | 37 |
| பதிவாளர் (வீட்டுவசதி) | 215 | 6 | 209 | 204 | 5 |
| பட்டுப்பூச்சி வளர்ப்புத்துறை இயக்குநர் | 4 | - | 4 | 3 | 1 |
| பனைவெல்ல அபிவிருத்தி வாரியம் | 203 | - | 203 | 203 | - |
| மொத்தம் | 5446 | 417 | 5029 | 4673 | 356 |

## முதல் கட்ட வாக்கு எண்ணிக்கை முடிவு

மொத்தம் நான்கு கட்டங்களாக நடைபெறும் தேர்தலில் முதல் கட்ட தேர்தலுக்கான வாக்குப்பதிவு 401 சங்கங்களில் 05.04.2013 அன்று நடைபெற்றது. இந்த வாக்குகள் 09.04.2013 அன்று எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டன. மொத்தம் 165880 பதிவான வாக்குகள் ஆகும். செல்லத்தகாத வாக்குகள், 36522 வாக்குகள் ஆகும். செல்லுபடியாகக் கூடிய வாக்குகள் 129358 ஆகும். இந்த வாக்கு எண்ணிக்கையின் முடிவில் 401 சங்கங்களில் 3573 நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்களுள் 553 பேர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இட ஒதுக்கீட்டின் கீழும், 896 பேர் பெண்களுக்கான இட ஒதுக்கீட்டின் கீழும், 2124 பேர் பொதுப்பிரிவின் கீழும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். முதல் கட்டத் தேர்தலில் ஏற்கெனவே 4735 சங்கங்களில் 45253 நிர்வாகக்குழு உறுப்பினர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இரண்டாம் கட்ட தேர்தல் வாக்குப்பதிவு

இரண்டாம் கட்டத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு 12.04.2013 அன்று காலை 8.00 மணி முதல் மாலை 5.00 வரை நடைபெறவுள்ளது. 283 சங்கங்களில் 3209 நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியதற்கு 6136 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

## நான்காம் கட்டத் தேர்தல்

நான்காம் கட்டத் தேர்தல் 27.04.2013 அன்று நடைபெறவுள்ளது. இதற்கான வேட்பு மனுத்தாக்கல் 15.04.2013 அன்று நடைபெறவுள்ளது.

## தலைவர், துணைத்தலைவர் தேர்வு

முதல் கட்டத்தில் தேர்தல் நடைபெற்ற சங்கங்களில் தலைவர் மற்றும் துணைத்தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் 16.04.2013 அன்றும் இரண்டாம் கட்டத்தில் தேர்தல் நடைபெற்ற சங்கங்களில் தலைவர் மற்றும் துணைத்தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் 23.04.2013 அன்றும் நடைபெறவுள்ளது.

மேற்கண்டவாறு கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் ஆணையர் திரு.ம.ரா.மோகன்,இ.ஆ.ப., (ஓய்வு) தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**ஆணையர்**

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.9**